**6354/1**
**Bahasa Tamil**
**Kertas 1**
**September 2011**
**1¾ jam**

ياياسن ڤيراق
YAYASAN PERAK

JABATAN PELAJARAN NEGERI PERAK

# PEPERIKSAAN PERCUBAAN SIJIL PELAJARAN MALAYSIA NEGERI PERAK TAHUN 2011

## BAHASA TAMIL

## தமிழ்மொழி

## KERTAS 1 / தாள் 1

**Satu jam empat puluh lima minit**

1 மணி 45 நிமிடங்கள்

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1. *Kertas soalan ini mengandungi dua bahagian :* **Bahagian A** *dan* **Bahagian B.**
2. *Jawab* **satu** *soalan daripada* **Bahagian A** *dan* **satu** *soalan daripada* **Bahagian B.**
3. *Jawapan anda hendaklah ditulis pada buku jawapan yang disediakan.*

**Kertas soalan ini mengandungi 4 halaman bercetak.**



more exam papers at :
www.myschoolchildren.com

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள், **பிரிவு அ** மற்றும் **பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.

**பிரிவு அ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[70 புள்ளிகள்]

[*பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்*]

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி 250 **சொற்களுக்குக் குறையாமல்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 இறையுணர்வு.

2 தனியார் நிறுவனங்களால் **மட்டுமே** நாட்டின் விளையாட்டுத் துறையை மேம்படுத்த முடியும்.

3 அதிகமான தொலைக்காட்சி அலைவரிசைகளால் ஏற்படும் **விளைவுகள்**.

4 'இலக்கியம் கற்பதன் அவசியம்' என்னும் தலைப்பில் **உரையாற்றுக.**

5 **சிந்தனை மாற்றம்** எனும் கருப்பொருளில் ஒரு சிறுகதை அல்லது நாடகம்/ஓரங்க நாடகம் எழுதுக.



more exam papers at :
www.myschoolchildren.com

## பிரிவு ஆ : வழிகாட்டிக் கட்டுரை

[30 புள்ளிகள்]

[*பரிந்துரைக்கப்படும் நேரம்:* 30 *நிமிடம்*]

கொடுக்கப்பட்டுள்ள கேள்வி 1, கேள்வி 2 ஆகியனவற்றுள் ஏதேனும் **ஒன்றனை மட்டும்** தெரிவு செய்து விடை எழுதுக.

1 சமீபகாலமாக உங்கள் வசிப்பிடத்தில் அடையாளம் தெரியாத நபர்களின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. இவர்கள் சில தகாத செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள், அங்குள்ள மக்களுக்கு அச்சுறுத்தலாகவே உள்ளனர். அவ்வசிப்பிடத்தின் செயலாளர் எனும் முறையில் இவர்களின் நடவடிக்கைகள் குறித்துக் காவல் துறையினருக்கு ஒரு புகார்க் கடிதம் எழுதவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி உமது **புகார்க் கடிதத்தைத்** தயார் செய்க.

- வசிப்பிடத்தில் இருக்கும் காலியான வீடுகளில் இவர்களின் நடமாட்டம்
- வீடுகளிலிருந்து பொருள்கள் அடிக்கடி காணாமல் போகுதல்
- வழிப்போக்கர்களிடம் வழிப்பறிக் கொள்ளை
- குடியிருப்போர் அச்சத்துடன் வாழுதல்
- எதிர்பார்ப்பு

**கடிதத்தைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:**

- அதிகாரப்பூர்வ கடித அமைப்பில் இருத்தல்
- அனுப்புநர் - பெறுநர் முகவரி சரியான முறையில் எழுதப்பட்டிருத்தல்
- தேதி - கரு எழுதியிருத்தல்
- பத்திகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
- கடிதத்தின் முடிவுரை
- எழுதியவரின் பெயர் - கையொப்பம் எழுதப்பட்டிருத்தல்
- பதவி

**அல்லது**


more exam papers at :
www.myschoolchildren.com

2 கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடை **வடிவத்தை மாற்றி** அதனை ஒரு **நேர்க்காணலாக** எழுதுக.

'மக்கள் ஓசை' நிருபரான மகேந்திரன் ஐஸ் கட்டியில் புது வடிவம் தரும் புருஷோத்தமன் அவர்களைப் பேட்டிக் காண்கிறார். ஓவியக் கலை என்பது ஓர் அற்புதமான கலை. அதே வேளையில், சிற்பக் கலை என்பதும் மிகச் சிறந்த கலைகளில் ஒன்றாகும். ஓவியனின் இரசனைக்கு ஏற்ப அதன் ஓவியங்கள் மெருகூட்டப்படுகின்றன என்ற கருத்தை முன்வைத்து உரையாடலைத் தொடங்கினார்.

நிருபர், ஐஸ் கட்டியைக் கொண்டு எத்தகைய சிற்பங்களை உருவாக்கலாம் என்பதற்குச் சிறந்த முன்னுதாரணமாக தாங்கள் இருப்பதாக புருஷோத்தமனிடம் எடுத்துரைத்தார். ஃபைபஸ் எம்.பி.கே. நிறுவனத்தைச் சேர்ந்த புருஷோத்தமன் அவர்களின் அனுபவத்தை வினவிய போது, அவர் இத்துறையில் 25 ஆண்டு காலமாக இருப்பதாகத் தெரிவித்தார். அவர் பெற்ற பயிற்சி தொடர்பாக சில விவரங்களைக் கேட்டறிந்த போது, அவர் 'ஹர்பின் ஐஸ் அகாடமியில்' பயிற்சிப பெற்றுள்ளதைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவரிடம், அவரது கைவண்ணங்களில் உருவாக்கிய சிற்பங்களைப் பற்றி வினவியபோது, நாட்டில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் குறிப்பாக தங்கும் விடுதிகள், மாநாட்டு மையங்கள், திருமண விழாக்கள் ஆகியவற்றில் ஃபைபஸின் கைவண்ணங்கள் அங்கே மிகவும் பிரசித்திப் பெற்று விளங்கியதையும் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றி பாராட்டுப் பெறுவதையும் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல், அவரது கைவண்ணத்தில் உருவாகிய சிற்பக் கலையை அறிந்து, 2000ஆம் ஆண்டில் இவருக்கு சிறந்த அலங்கரிப்பாளர் எனும் 'மிம்மி' விருது வழங்கப்பட்டதை அச்சந்திப்பில் நிருபரோடு அவர் பகிர்ந்து கொண்டார்.

மக்களின் ஆதரவு குறித்து நிருபர் எழுப்பிய கேள்விக்கு இப்பொழுது இந்தியர்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைப்பதாகவும் திருமண விருந்து மையங்களில் ஃபைபஸின் கைவண்ணங்கள் பார்ப்பவர்களைக் கவரும் வகையில் இருப்பதால், வாடிக்கையாளர்கள் கேட்கும் பல்வேறு வடிவங்களை ஐஸ் கட்டியைக் கொண்டு வடிவமைத்துத் தருவதாக அவர் கூறினார்.

இத்துறையில் அவர் எதிர்நோக்கும் சவால் குறித்துக் கருத்துக் கேட்டபோது, சீனர்களே இந்தத் துறையில் அதிகமாக இருப்பதால் போட்டி கடுமையாக உள்ளதாகவும், அவற்றை எதிர்கொள்ள சீன நாட்டைச் சேர்ந்த பயிற்சியாளர்களிடம் பயிற்சி பெற்று இந்தத் துறையில் நீடித்திருக்க முடிவதாகவும் கூறினார் புருஷோத்தமன்.

விடைபெறும் முன் அவரது இலட்சியம் குறித்துக் கேட்கையில், தமிழில் உள்ள 247 எழுத்துக்களை ஐஸ் கட்டியைக் கொண்டு வடிவமைப்புச் செய்யப் போவதாகக் கூறினார். இந்த இலட்சியத்தைத் தன்னால் நிச்சயம் வெற்றி பெறச் செய்ய முடியும். இது ஒரு கடுமையான பணி என்றாலும் தமிழிலும் முத்திரை பதிக்க வேண்டும் எனும் வேட்கையைத் தாம் கொண்டுள்ளதாகக் கூறி விடைபெற்றார் திரு. புருஷோத்தமன்.

**( மக்கள் ஓசை நாளிதழ் - எடுத்தாளப்பட்டது )**

KERTAS SOALAN TAMAT



more exam papers at :
www.myschoolchildren.com